[1994 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதுமே கேள்வியாகக் கேட்கமாட்டேன் என்கிறீர்களே.

திரு. இராம. இராமநாதன் : தயவு செய்து மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, கணிதமேதை இராமானுஜம் அவர்கள் பயின்றிருக்கக்கூடிய கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு அவருடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்ற மக்கள் கோரிக்கையை இங்கே வைத்து, அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான தலைவர்களது பெயர்களுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதில் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்போதுமே அக்கறையோடு இருக்கிறார்கள். கும்பகோணத்தில் குழப்பம் வரும் என்பதல்ல. தமிழகம் முழுவதும் இந்தக் குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையிலே சொல்லியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினரும் இந்தக் குழப்பத்திற்கு ஆட்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 415, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

415—

திருவையாறு அரசர் கல்லூரிக்கு விளையாட்டுத் திடல் அமைத்தல்.

**23111—திரு. ப. கலியபெருமாள்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு வட்டத்திலுள்ள அரசர் கல்லூரியில் மாணவர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

1994 ஏப்ரல் 27]

முற்பகல் 11-05

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பு ஏதும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வரலாற்றுச் சிறப்புடைய திருவையாறு எனும் திருத்தலத்தில் மன்னர்களால் அமைக்கப்பெற்று பல நூறு ஆண்டுகளாக நடைபெற்று வரும் அரசர் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வினாவிற்குத்தான் நான் விடை அளித்தேன். திருவையாறு வட்டத்திலே அரசர் கல்லூரி என்பது ஒரு உதவி பெறும் தனியார் கல்லூரி. இந்தக் கல்லூரியிலே விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டுமானால், அந்த நிர்வாகம் தான் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

திரு. ப. கலியபெருமாள்: "காவிரி, தென்பெண்ணை, பாலாறு, தமிழ்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள். கேள்வி நேரத்திலும் பாட்டுப் பாட ஆரம்பித்தால், கேள்விகளை முடிக்க முடியாது. பேசும்போது பாட்டுப் பாடலாம்.

திரு. ப. கலியபெருமாள்:

'கண்டதோர் வையை பொருனைநதி– யென
மேவிய யாறு பலவோடத்– திரு
மேனி செழித்த தமிழ்நாடு'

என்று பாரதியார் பாடினார். ஆறுகள் ஓடுகின்றன; நிலத்தில் பாய்கின்றன. அதனால் தாய்நாடு செழிப்பு அடைகிறது. தமிழ்நாடு, தமிழ்மண் என்று கூறாமல், மேனி செழித்த தமிழ்நாடு என்று கூறுகிறார். மேனி செழிக்க வளமான ஆறுகள் வேண்டும். தஞ்சை செழிக்க காவிரி பயன்படுகிறது. சோழ நாடு, வள நாடு என்று போற்றப்படுவது எல்லாம், காவிரியால் தான். காவிரி,. 'பொன்னி' என்றும் அழைக்கப்படுகிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கலியபெருமாள், திருவையாறில் இருக்கிற அரசர் கல்லூரியிலே விளையாட்டுத் திடல் அமைப்பதுபற்றிய கேள்வி. இதிலே, காவிரி, தென்பெண்ணை, பிறகு பாலாறு எல்லாவற்றுக்கும் நீங்கள் போய், மேனி செழிப்பது எல்லாம் அதிலே வந்து கொண்டிருந்தால் என்ன ஆகும்? அந்தக் கல்லூரிக்குள்ளே போங்கள். (சிரிப்பு)

[*1994 ஏப்ரல் 27*

திரு. ப. கலியபெருமாள்: சோழ மன்னவர்களுக்கு பொன்னி வளவன் என்ற பெயரும் உண்டு. கம்பர்கூட காவிரி நாடு என்றும், கலிங்க நாடு என்றும் கூறி உள்ளார். காவிரிக் கரையிலே பல நகரங்கள், ஊர்கள் இருக்கின்றன...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் நீங்கள் கேள்விக்கு வரவில்லை.

திரு. ப. கலியபெருமாள்: ஆடி பதினெட்டு அன்று நீராடி மகிழ்கின்றனர்; புதுமணத் தம்பதிகளுக்கு எல்லாம் விழா. தாயே ! தமிழ்த் தாயே! காவிரித் தாயே! எங்களைக் காப்பாற்ற வேண்டும் என வேண்டுகிறார்கள். சோழ வள நாட்டை வளப்படுத்தும் காவிரிக் கரையில் அமைந்துள்ள சிறு நகரம் திருவையாறு ஆகும். உலகப் புகழ் பெற்ற தியாகப் பிரும்மம் வாழ்ந்தது இங்குதான். பல்வேறு கலைகள் வளர்க்கும் தமிழ் மன்றம் உள்ளதும் இங்குதான். பஞ்சநதீஸ்வரர் ஆலயமும் இங்குதான் உள்ளது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கலியபெருமாள், நீங்கள் கல்லூரிக்குள்ளேயே இன்னும் போகவில்லை. பிறகு நீங்கள் விளையாட்டுத் திடலுக்குப் போய், விளையாட்டுத் திடல் பற்றி எப்போது கேட்பது? விளையாட்டுத் திடலுக்கு போங்கள்.

திரு. ப. கலியபெருமாள் : அரசர் கல்லூரி எனும் திருக்கோயிலில் பல்வேறு கலைகள் பயின்றுவரும் மாணவர்களுக்கு – விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் உருவாக்கி வெற்றிவாகை சூட்டி வரும் வீரத் தாய் எங்கள் புரட்சித் தலைவி ஆட்சியிலே — விளையாட்டுத் திடல் அமைக்க, பேராசிரியர் பணியை விடுத்து, நாட்டுப் பணியாற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் திடல் பற்றிய கேள்வியாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழிலும் கொஞ்சம் விளையாடிக் கொண்டிருக்கிறார் என நினைக்கிறேன். பொதுவாக நிதி உதவி பெறுகின்ற கல்லூரிகள் தங்களுடைய அத்தியாவசியத் தேவைகள் குறித்து மானியம் பெறுவதற்காக அரசுக்கு விண்ணபிக்கலாம். விண்ணப்பங்கள் வருமானால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அது குறித்துப் பரிசீலித்து மானியம் வழங்குவதற்கான ஒரு திட்டம் அரசிடத்திலே இருக்கிறது. இந்தக் கல்லூரி, விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு ஒரு கருத்துரு அனுப்பி மானியம் கோரி விண்ணப்பம் அனுப்புமேயானால், முதலிலே 50 விழுக்காடு மானியம் வழங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

1994 ஏப்ரல் 27]

அதில் முதலில் 75 விழுக்காடு தொகை அளிக்கப்படுவதற்கும், திட்டமிட்டபடி பணி நிறைவேற்றப்படுமானால், மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்கள் பார்வையிட்டு, நிறைவுச் சான்று வழங்கிய பின்னர் இரண்டாவது தவணை வழங்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பைப் பெறுவதற்கு இந்தக் கல்லூரி முயற்சிக்கலாம். இப்படிப்பட்ட முன்மொழிவு பெறப்படுமேயானால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் விதிமுறைகளின்படி இதைப் பரிசீலிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 416, திரு கா. பூ. முனுசாமி, இருக்கையில் இருக்கிறாரா? (குறுக்கீடு) மொட்டை அடித்துக்கொண்டு வந்து இருக்கிறீர்கள், அதனால் தெரியவில்லை. திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

416—

தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைத்தல்.

***24865**—திரு. கா. பூ. முனுசாமி:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய நகரங்களில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய நகரங்களில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இந்த 3 நகரங்களும் வளர்ந்து கொண்டு வருகின்ற நகரங்கள். குறிப்பாக ஓசூர் நகரம் தொழிற்சாலைகளை உள்ளடக்கிய நகரமாக இருக்கின்ற காரணத்தினால், பல மாநிலங்களில் இருந்து மக்கள் வந்து அங்கே தொழிற்சாலைகளில் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, அங்கே கூட்டுறவு சிறப்பு அங்காடியைத் திறந்து வைத்தால், நியாயமான விலையில் பொருட்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாகப்